திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற நிலைக்குழு (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை) தலைவர் கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (30.08.2023) நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், எத்திலோடு ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, மகளிர் சுயஉதவிக்குழு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினருக்கு வங்கிக் கடனுதவிகளை வழங்கினார். அருகில் பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன் உட்பட பலர் உள்ளனர்.

இந்தியா கூட்டணியில்

பா.ஜ.க. கூட்டணி கட்சிகளும் சேரும்!

பீகார் முதல்வர் நிதிஷ் குமார் கருத்து!

பாட்னா, செப்.1-

இந்தியா கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய இருப்பதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்நிலையில், காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அலோக் சர்மா அளித்த பேட்டியில், "பாஜ தனது தேசிய ஜனநாயக கூட்டணியில் 38 கட்சிகள் இருப்பதாக கூறி வருகிறது. அதில் உள்ள சுமார் 5 கட்சிகள் இந்தியா கூட்டணியில் இணைய பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன. இன்னும் பல கட்சிகள் இந்தியா கூட்டணிக்கு வர உள்ளன. புதிதாக இணையும் கட்சிகள் குறித்து அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படும்" என்றார்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பரிசுகள் வழங்கி சிறப்புரை!

திருவண்ணாமலை, செப்.1-

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்கேற்கும், தலைவர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி நடைபெறவுள்ளது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்...

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாநிலத் தலைவர் - வாகை சந்திரசேகர் ஆகியோரின் வழிகாட்டு தலின்படி, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவ - மாணவிகளுக்கு, முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி சிறப்பாக நடத்தப்பெறவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றை தங்கள்

பள்ளிகள் 09, 10, 11, 12 வகுப்புகளில் பயிலும் மாணவ - மாணவியரில் திறம்பட ஒப்பிக்கும் மூவரை தேர்வு செய்து, மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவ-மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.5,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 3,000/மும், மூன்றாம் பரிசாக ரூ. 2,000/மும் வழங்கப்படும். மாவட்ட நடைபெறும் போட்டிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து, பரிசுகள் வழங்சி சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ-மாணவியர் மண்டல அளவிலான தேர்வுக்கு அழைத்து செல்லப்படுவர். மண்டல அளவில் முதல் பரிசாக ரூ. 10,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 5,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.3,000/மும் வழங்கப்படும்.

மண்டல அளவில் வெற்றி பெறுவோர், மாநில அளவில் நடக்கும் போட்டிகளுக்கு அழைத்துச் செல்லப்படுவர். மாநில அளவில் முதல் பரிசாக ரூ. 25,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 15,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.10,000/மும், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படவுள்ளது.

தங்கள் பள்ளியின் பெயரை மாநில அளவில் உயர்த்திப்பிடிக்கும் திறன்படைத்த மூன்று மாணவ-மாணவியரை தேர்வு செய்து, மாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளுக்கு 11.09.2023 திங்கட்கிழமைக்குள், பொறுப்பாளர், மாவட்ட தி.மு.க. அலுவலகம், 54, திருக்கோயிலூர் சாலை, சாரோன், திருவண்ணாமலை606 603 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்

பட்டிக்காடு : ஏன் தம்பி; திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர்களுக்கு உரிமையான பட்டங்கள் வழங்கப்படவில்லையாமே ?

பட்டணம் : ஆமாம் அய்யா; உண்மைதான். படித்து முடித்துப் பட்டம் பெற முடியாமல், 5 லட்சம் மாணவர்கள் காத்திருக்கிறார்களாம். பட்டம் என்பது, படித்து முடித்து தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவியரின் தகுதி உரிமைச் சான்றாவணம் ஆகும்.

அந்த ஆவணம் கையில் இல்லாமல், வேலை வாய்ப்புக்கு முயற்சி செய்ய முடியாது. வேலை இல்லாத மாணவர்களின் மனதில் விபரீத எண்ணங்கள் உருண்டு உபத்திரவப்படுத்தும் என்பதை ஊரே அறியும். ஆளுநர் அறியாதிருப்பது ஆச்சரியமே!

பட்டமளிப்பு விழா நடத்திட அனுமதி அளிக்காமல், ஒரு தலைமுறையின் முன்னேற்றத்தை ஒத்திவைக்கிறோமே என்ற உறுத்தல் இல்லாமல்; உதகைக்கும், கொடைக்கானலுக்கும் உல்லாசப் பயணம் போகிறார் ஆளுநர்.

மலினமான விளம்பர நோக்கில், சர்ச்சைக் குப்பைகளைக் கிளறுவதிலும், செய்ய வேண்டியதைத் தவிர்த்து, செய்யக் கூடாததைச் செய்வதிலும்தான் ஆளுநர் முழு நேரத்தையும் செலவிடுகிறார். அதனால் மாணவர்கள் பட்டம் பறக்க விட்டு, போராட்டம் நடத்தி, உள்ளப் புழுக்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் !

'இண்டியா' கூட்டணியின் முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டம்

இந்தியாவில் ஆட்சி மாற்றத்துக்கு நிச்சயம் வழிவகுக்கும்!

'தினகரன்' நாளிதழ் தலையங்கம்!

சென்னை, செப். 1-

'தினகரன்' நாளிதழில் நேற்றைய தினம் வெளியாகியிருந்த, 'ஏற்றமும் இறக்கமும்' எனும் தலைப்பிலான தலையங்கத்தில், 'இண்டியா' கூட்டணியின் முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டம், இந்தியாவில் ஆட்சி மாற்றத்துக்கு நிச்சயம் வழிவகுக்கும்!" என அறுதியிட்டுக் கூறியுள்ளது.

'தினகரன்' நாளிதழில் வெளியான அத்தலையங்கம் வருமாறு:-

அடுத்தாண்டு நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகள் தற்போதே தொடங்கி நடந்து வருகின்றன. இந்தியாவில் மீண்டும் பா.ஜ. ஆட்சி அமைவதற்கான ஹாட்ரிக் வாய்ப்பை தரக்கூடாது என்பதற்காக, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து 'இந்தியா' கூட்டணியை உருவாக்கி உள்ளன. அதே நேரம், 'ஈயம் பூசின மாதிரியும் இருக்கணும்... பூசாத மாதிரியும் இருக்கணும்' என்பது போல, 'இந்தியா' கூட்டணியை கண்டு பயம் இல்லாதது போலவும், அதே நேரம் வலுவான அந்த கூட்டணியை அசைப்பது எப்படி என்பது குறித்தும் பா.ஜ. உயர்மட்டக்குழு ஆலோசித்து வருகிறது.

இதன் முதல் கட்டமாக காஸ் விலையை ரூ.200 குறைத்துள்ளது. இது வரும் தேர்தலில் பிளஸ் பாயிண்ட் ஆக அமையலாம் என பா.ஜ. எண்ணியிருக்கலாம். ஆனால், காங். ஆட்சியில் இருந்தவரை ரூ.414க்கு விற்ற காஸ் சிலிண்டர், கிட்டத்தட்ட 3 மடங்கு அளவு பா.ஜ. ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. சில்லறை விலையில் மொத்தமாக நகர்ப்புறத்தில் வசிக்கும் ஒருவர் ரூ.1,200 வரை தர வேண்டிய அவல நிலை இருந்து வந்தது. சர்வதேச கச்சா எண்ணெய் விலை நிலவரத்தின் அடிப்படையில் எண்ணெய் நிறுவனங்கள், காஸ் சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலையை நிர்ணயித்து வருகின்றன.

இதன்படி பெட்ரோல், டீசல் விலை தினந்தோறும், காஸ் விலை மாதந்தோறும்

தினகரன்

ஆகஸ்ட் 31, 2023 வியாழக்கிழமை

ஏற்றமும்... இறக்கமும்...

அடுத்தாண்டு நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகள் தற்போதே தொடங்கி நடந்து வருகின்றன. இந்தியாவில் மீண்டும் பாஜ ஆட்சி அமையலாம் என ஹாட்ரிக் வாய்ப்பை தரக்கூடாது என்பதற்காக, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து 'இந்தியா' கூட்டணியை உருவாக்கி உள்ளன.

அதே நேரம், 'ஈயம் பூசின மாதிரியும் இருக்கணும்... பூசாத மாதிரியும் இருக்கணும்' என்பது போல, 'இந்தியா' கூட்டணியை கண்டு பயம் இல்லாதது போலவும், அதே நேரம் வலுவான அந்த கூட்டணியை அசைப்பது எப்படி என்பது குறித்தும் பாஜ உயர்மட்டக்குழு ஆலோசித்து வருகிறது.

இதன் முதல் கட்டமாக காஸ் விலையை ₹200 குறைத்துள்ளது. இது வரும் தேர்தலில் பிளஸ் பாயிண்ட் ஆக அமையலாம் என பாஜ எண்ணியிருக்கலாம். ஆனால், காங். ஆட்சியில் இருந்தவரை ₹414க்கு விற்ற காஸ் சிலிண்டர், கிட்டத்தட்ட 3 மடங்கு அளவு பாஜ ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. சில்லறை விலையில் மொத்தமாக நகர்ப்புறத்தில் வசிக்கும் ஒருவர் ₹1,200 வரை தர வேண்டிய அவல நிலை இருந்து வந்தது.

சர்வதேச கச்சா எண்ணெய் விலை நிலவரத்தின் அடிப்படையில் எண்ணெய் நிறுவனங்கள், காஸ் சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலையை

1 அல்லது 2ம் தேதிகளில் மாற்றமடையும். ஏற்கனவே, காஸ் சிலிண்டருக்காக தரப்பட்ட மானியம் 80 சதவீதத்திற்கு மேலான நுகர்வோருக்கு அறிவிப்பின்றி நிறுத்தப்பட்டு விட்டது. இந்த சூழலில் காஸ் சிலிண்டரின் விலை குறைப்பு, எத்தனை நாள் நீடிக்குமென தெரியவில்லை. காஸ் சிலிண்டர் விலை குறைப்பு சிறு மகிழ்ச்சியை தந்தாலும், நள்ளிரவு முதல் டோல்கேட் கட்டணத்தை 10 - 20 சதவீதம் வரை அதிரடியாக உயர்த்தி அடுத்த அதிர்ச்சியை தந்துள்ளது ஒன்றிய அரசு.

தமிழகத்தில் மட்டும் 26 சுங்கச்சாவடிகளில் இந்த கட்டண முறை அமலுக்கு வருகிறது. டோல்கேட் கட்டணம் உயரும்போது அத்தியாவசிய பொருட்களின் விலையும் கணிசமாக உயரும் வாய்ப்புகள் உள்ளன. சிலிண்டர் விலையை குறைத்தது போல நடுத்தர மக்களை பெரிதும் பாதிக்கும் பெட்ரோல், டீசல் விலையை ஏன் குறைக்கவில்லை என எதிர்க்கட்சிகள், பா.ஜ. அரசுக்கு கேள்விகளை எழுப்பியுள்ளன. 5 மாநிலங்களின் சட்டசபை மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களை மனதில் வைத்தே, இந்த விலைக் குறைப்பு நாடகத்தை பா.ஜ. அரசு அரங்கேற்றியுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த பரபரப்பான சூழலில், பா.ஜ. அரசின் இந்த தேர்தல் நாடகங்களை அம்பலப்படுத்தவும், நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.வை எதிர்கொள்வதற்கான வியூகம் அமைப்பதற்காகவும், அடுத்தக்கட்ட செயல்பாடுகள், தலைவர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளில் யாரை நியமிப்பது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுப்பதற்காகவும் இன்று மும்பையில் 'இந்தியா' கூட்டணியின் 3வது கூட்டம் நடக்க உள்ளது. இதில் காங்., தி.மு.க., திரிணமூல் காங் உள்ளிட்ட கட்சிகளின் முக்கிய தலைவர்கள் பங்கேற்கின்றனர். இதில் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். இக்கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய உள்ளதாகவும் கூறப்படுகிறது. இதன்மூலம் இந்தியா கூட்டணியின் பலம் மேலும் அதிகரிக்கும். 'இந்தியா' கூட்டணியின் முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டமும், இனி இக்கூட்டணியின் செயல்பாடுகளும் அடுத்தாண்டு இந்தியாவில் ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 30.08.2023, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு நாகர்கோவில், செம்மாங்குடி சாலையில் வைத்து மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ்தீசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநில மகளிர் அணிச் செயலாளர் திருமதி. ஜெ. ஹெலன்டேவிட்சன் தில்லைசெல்வம், வழக்கறிஞர் ஏ.என். லிவிங்ஸ்டன், வி. ஜோசப் ராஜ், என். தாமரைபாரதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தூத்துக்குடி - முள்ளக்காட்டில் ரூ 1.70 கோடியில்

கடல்நீர் சாகச விளையாட்டுகளுடன் சுற்றுலா தலம்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

திருச்செந்தூர், செப்.1-

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில், சுற்றுலாத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்துவது குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (30.8.2023) ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது : -

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் கள ஆய்வு செய்து தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். திருச்செந்தூரில் 1967ம் ஆண்டில் இருந்து ஓட்டல் தமிழ்நாடு 4.57 ஏக்கரில் 47 அறைகளுடன் இயங்கி வருகிறது. மேலும், கூடுதல் அறைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருச்செந்தூரில் மற்ற எந்தவொரு ஓட்டல்களிலும் ஓட்டல் தமிழ்நாடு அளவுக்கு அதிக இடவசதி கிடையாது.

தற்போது ஓட்டல் தமிழ்நாட்டில் உள்ள படுக்கைகள் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், இங்கு வரும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவதற்காக சுமார் 55 ஆண்டுகள் பழமையான இந்த கட்டிடத்தில்ஏற்பட்டுள்ளபழுதுகளை சரிசெய்து வருகிறோம். ஓராண்டிற் குள் பழுதுகள் முழுமையாக சரி செய்யப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காடு கடற்கரைப்பகுதியை கடல்நீர் சாகச விளையாட்டு கள் அடங்கிய சுற்றுலா தலமாக ஏற்படுத்த ரூ.1.70 கோடி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தொடங்குவது தொடர்பாக நேற்று நேரில் சென்று கள ஆய்வு செய்தோம். இத்திட்டத்திற்கு தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக நிர்வாகத்திடம் சமூக பொறுப்பு நிதியில் இருந்து ரூ.45.46 இலட்சம் முதற்கட்டமாக பெறப்பட்டு சாகச விளையாட்டுகளுக்கு தேவையான பொருட்கள் வாங்கப்பட்டுள்ளது. முள்ளக்காடு கடற்கரை கோவளம் கடற்கரையைப்போல் நன்றாக மேம்படுத்தப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுற்றுலாத்துறை மூலம் 10 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோவில் மற்றும் மணப்பாடு சிலுவைக் கோவில் ஆகிய 2 இடங்களில் சுற்றுலாவை மேம்படுத் துவதற்காக அடுத்த ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்படும். வருகின்ற 5ஆம் தேதி நடைபெறும் சுற்றுலா மேம்பாடு தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் ஓட்டல் தமிழ்நாடுகளில் உள்ள அறைகளின் வாடகை தொடர்பாக ஆலோசிக்கப்படும்.

மேலும், ராமேஸ்வரத்திற்கு கடந்த ஆண்டு 1.80 கோடி சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்த ஆண்டு கடந்த 6 மாதத்தில் மட்டும் 1.60 கோடி சுற்றுலா பயணிகள் வருகைத் தந்துள்ளனர். இதை இன்னும் அதிகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது திருச்செந்தூர் திருக்கோவில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாக மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் முடிந்தவுடன் திருப்பதி கோவிலை விட திருச்செந்தூர் திருக்கோவில் சிறப்பாக இருக்கும். எனவே வருங்காலங்களில் இன்னும் அதிக மான சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

ஆய்வில் சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப்நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன், மண்டல மேலாளர் (சுற்றுலா வளர்ச்சிக்கழகம், மதுரை) டேவிட் பிரபாகரன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் குருச்சந்திரன், சுற்றுலா அலுவலர் திருவாசன், திருச்செந்தூர் வட்டாட்சியர் வாமனன் மற்றும் அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சேலம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.20/2023-2024/தவஅ/நாள்-28.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், **தருமபுரி (நெ)** க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த 2023–24 திட்டம் சாரா ஒரு பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.09.2023 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 31.08.2023 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர் (நெ)
க(ம)ப, சேலம் வட்டம்

செ.ம.தொ.இ/4798/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு(இணையதள வழியில் மட்டும்)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 05/2023-24 / முவஅ / நாள்: 25.08.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் தஞ்சாவூர் (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான கீழ்கண்ட பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) **21.09.2023, 15.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 "முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாச்சத்திரம் சாலை (மா.நெ.71) கி.மீ 147/6 ல் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்பகட்டுதல் பணி"

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை http://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **04.09.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.

செ.ம.தொ.இ./4777/ஒப்பந்தப்புள்ளி/2023

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் – 1

ம.அ.1.ந.க.எண் பி1/1690/2023 **மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கீழ்காணும் பணிக்கு மண்டல அலுவலர்-1 அவர்களால் கோரப்படுகிறது

மண்டலம்-1, 2023-24 ஆம் ஆண்டு **சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் (MLA Fund)** பகுதி-3 வார்டு எண்-11 காலடிப்பேட்டை மார்க்கெட் லேனில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் புதியதாக 3 வகுப்பறைகள் மற்றும் கழிவறை கட்டும் பணி.

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் கலந்து கொள்ளலாம்

முன்வைப்பு தொகை ரூ.80500/-

ஒப்பம் சமர்ப்பிக்கும் நாள் : 13.09.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 14.09.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 4818 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மண்டல அலுவலர் – 1